தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி சேர்க்கை 2022

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025

2022–23–ம் கல்வி ஆண்டிற்கான பட்டயப்படிப்பு மாணாக்கர்கள் சேர்க்கை

(தமிழ்நாடு மாணாக்கர்களுக்கு மட்டும்)

விளம்பர அறிக்கை எண். 13890 / I–1 /2022, நாள். 22.06.2022

தமிழ்நாடு அரசு அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான முதலாமாண்டு, பகுதி நேர பட்டயப் படிப்பு மற்றும் நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பிற்கு விண்ணப்பிக்கவும், கீழ்க்கண்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: **https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவுசெய்ய வேண்டும். இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் மாவட்ட சேவை மையங்கள் (TNEA Facilitation Centre) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அனைத்து TNEA Facilitation மையங்களிலும் போதிய அளவில் கொரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வித் தகுதி :

1. முதலாமாண்டு பட்டயச் சேர்க்கை : (1st Year Diploma Course)

பத்தாம் வகுப்பு (SSLC / Matriculation) தேர்ச்சி (அல்லது) அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி.

2. நேரடி இரண்டாமாண்டு பட்டயச் சேர்க்கை : (Direct Second Year Diploma Admission)

மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், கீழ்கண்ட பாடப்பிரிவுகளில் ஏதேனும் மூன்று பாடப்பிரிவுகள் பயின்றிருக்க வேண்டும்.

Physics / Mathematics / Chemistry / Computer Science / Electronics / Information Technology / Biology / Informatics Practices / Biotechnology / Technical Vocational Subject / Agriculture / Engineering Graphics / Business Studies / Entrepreneurship (Any of the three)

(அல்லது)

10–ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 2 ஆண்டுகள் தொழில் பிரிவில் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (10th std passed and 2 years ITI passed in any branch of Engineering and Technology)

3. பகுதி நேர பட்டயச் சேர்க்கை : (Part-Time Diploma Course)

தகுதி : 10th + (2 years ITI) / 10th + (2 years Experience). படிப்பிற்கான கால அளவு – 4 வருடங்கள்

பதிவுக் கட்டணம் : பதிவுக் கட்டணமான ரூ.150/–ஐ விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதள வாயிலாக செலுத்தலாம்.

SC /ST பிரிவினர் பதிவுக் கட்டணம் செலுத்த அவசியமில்லை.

முதலாமாண்டு, பகுதி நேர பட்டயப் படிப்பு மற்றும் நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள்	**23.06.2022**
முதலாமாண்டு, பகுதி நேர பட்டயப் படிப்பு மற்றும் நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள்	**08.07.2022**
10 – ஆம் வகுப்பு / 12 – ஆம் வகுப்பு / ITI மதிப்பெண் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், சிறப்பு பிரிவினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் புகைப்படம் ஆகியவை தேவையான அளவுகளில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.	

அனைத்து தகவல்கள், வழிகாட்டி மற்றும் தொலைபேசி எண்கள் மாணாக்கர்கள் **https://www.tnpoly.in** இணையதள வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

ஆணையர்

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்

செ.ம.தொ.இ./609/வரைகலை/2022